ISSN:2582-9599

27 சங்க கால
மக்களும் மனித

# தருக்கவியல் நோக்கில் பிரபோதசந்திரோதயம்

**ப.தினேஷ்குமார்**

**முனைவர்பட்ட ஆய்வாளர், சுப்ரமணிய பாரதி தமிழியற்புலம்**

**புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி - 605 014.**

thirunavukarasupalanivel@pondiuni.ac.in

31

**ஆய்வுச்சுருக்கம்:**

தமிழில் சிலப்பதிகாரம் முதலாக பல காப்பியங்கள் தோன்றியிருக்கின்றன. காலந்தோறும் இவ்விலக்கிய வகைமையின் வடிவும் பாடுபொருளும் மாறி வந்திருப்பதை காணமுடிகிறது. தமிழில் முதன்முதலில் தருக்கவியலின் (Epistemology) கூற்றுமுறை (Syllogism) பற்றிய செய்திகள் மணிமேகலையில் இடம்பெறுகின்றது. தொடர்ந்து நீலகேசி, குண்டலகேசி, அஞ்சனகேசி, காலகேசி, சூளாமணி முதலிய சமயவாத காப்பியங்களிலும் தருக்கம் பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளன. இவ்வரிசையில் கி.பி. 17ஆம் நூற்றாண்டில் தென்மாதை திருவேங்கடநாதர் இயற்றிய “பிரபோத சந்திரோதயம்” என்னும் “மெய்ஞ்ஞான விளக்கம்” என்ற காப்பியம் தருக்கமுறையில் அத்வைதத்தை நிறுவுதற்காகவே எழுந்ததாகும். இக்காப்பியத்தில் சமயவாதம் வழியாக அறியலாகும் தருக்கவியல் கூறுகளை வெளிப்படுத்தும் வண்ணம் இக்கட்டுரை அமைகிறது.

**திறவுச் சொற்கள்:**

**அளவையியல்(தருக்கம்) – கூற்றுமுறை – சமயவாத உருவக காப்பியம் – பிரபோத சந்திரோதயம் - மாதைவேந்தன் திருவேங்கடநாதன் – கேவலாத்துவிதம் – பிரம்மஞானம்**

**முன்னுரை:**

“பிரபோத சந்திர உதயம்” என்பது வடசொல் ஆட்சி. பிரபோதம் என்றால் மெய்யறிவு, பொய்யறிவாகிய இருளைப் போக்குவது மெய்யறிவு. பிரபோதமாகிற சந்திரனின் உதயம், பிரபோத சந்திரோதயம் என்பதாகும். பொய்யறிவாகிய நெறியையுடைய சந்திரனின் தோற்றம் என்று கூறப்பெறும். இப்பெரும் காப்பிய பெயர் உருவகமாதல் போலவே காப்பிய கதையும் உருவகமாக அமைக்கப்பட்டுள்ளது. சுருதி, லிங்க, வாக்கிய, பிரகரண, ஸ்தான, சமாக்கியா என்ற ஆறு வழிகளில் வேதாந்த அறிஞர் ஆய்வு செய்து உண்மையை விளக்குவர். இம்முறை அனைவரும் பின்பற்ற முடியாது. ஆகையால், தமிழில் கேவலாத்துவித வேதாந்தத்தைக் கூற பாசவதைப்பரணி, மோகவதைப்பரணி, அஞ்ஞவதைப் பரணி போன்ற நூல்கள் தோன்றின. அவற்றுள் வேதாந்தத்தை தருக்கமுறையில் நிறுவ எழுந்ததே தென்மாதை திருவேங்கடநாதர் செய்த ‘பிரபோத சந்திரோதயம்’ எனும் இத்தமிழ்ப் பெருங்காப்பியமாகும்.

**தென்மாதை திருவேங்கடநாதரும் பிரபோத சந்திரோதயமும்:**

பிரபோத சந்திரோதயம் எனும் நூல் முதலில் வடமொழியில் செய்யப்பட்டது. இம்முதனூல்,

கீர்த்திவர்மன் என்ற மன்னனின் அமைச்சர் கோபாலன் என்பான் சேடி நாட்டு மன்னன் கர்ணனை வென்றதன் நினைவாக வங்கத்தைச் சேர்ந்த கிருஷ்ணமிசிரர் என்ற கவிஞர் ஆறு அங்கங்களாக செய்த உருவக நாடகம் ஆகும். இதற்கு மூலம், ஸ்ரீமத் பாகவதத்தில் நான்காவது ஸ்கந்தத்தில் உள்ள "புரஞ்சனோபாக்கியானம்" என்ற பகுதி ஆகும். கேவலாத்துவித கொள்கையை (ஒருபொருள் கொள்கை) விளக்க எழுந்த இப்படைப்பு எழுந்த காலம் முதல் பல மறுப்பு நூல்கள், வியாக்கியானங்கள், நாடக மேடைகள் போன்ற ஊடகங்களில் வழியாக உயிர்ப்போடிருந்திருக்கிறது. வாசிப்பு, மறுவாசிப்பு, அரங்கேற்றம் என ஒரு இலக்கியப் பிரதியாக நிகழ்த்துக்கலைக்கானப் பனுவலாக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு படைப்பாகவே இந்நூலைப் புரிந்துணர வேண்டிய தேவையுள்ளது.

தமிழ் இலக்கியவெளியில் இப்பனுவல் வரலாற்று ரீதியாக தொடர்ந்து வழங்கி வந்திருப்பதை ஒரு சிறிது காட்டுதும். வங்கத்தில் தோன்றிய இந்நாடகம் தமிழகத்து கோவில்களிலும் நாடகமாக அரங்கேறியுள்ளதையும் ஒற்றியூர் படம்பக்கநாதர் திருக்கோவில் நிர்வாகத்தையும் சீர்திருத்தியுள்ளதையும் சாசனங்களால் (எண்.919 Public Dep 29-7-1912, Pg.67, 68 ARE 367, 368 Appendix B) அறிய முடிகிறது.

இந்நூலிற்கு மறுப்பு நூல்களாக வடகலை ஸ்ரீ வைணவ ஆச்சாரியார் ஸ்ரீவேதாந்த தேசிகர் (கி.பி. 1268 - 1369) 'சங்கற்ப சூரியயோதயம்' என்ற பெயரில் ஒன்பது அங்கங்களைக் கொண்ட நாடக நூலை வைணவ கொள்கையை நிறுவியும் கேவலாத்துவிதத்தை மறுத்தும் எழுதினார். இந்நூலிற்கு மறுப்புரையாகவும் பிரபோதசந்திரோதயத்திற்கு உரையாகவும் சிவாத்துவித சைவர் ஸ்ரீஅப்பைய தீட்சிதர் (கி.பி. 1520 - 1592) 'மேகராஜம்' என்ற நூலை எழுதினார்.

மேகராஜத்தை மறுத்தும் சங்கற்ப சூரியயோதத்திற்கு உரையுமாக 'சண்டமாருதம்' என்ற நூலை கி.பி. 16ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சிம்மபுரம் தொட்டையாசாரியார் செய்தார். அப்பைய தீட்சிதர் காஞ்சிக்கு வந்திருந்தபொழுது இந்நாடகம் நடித்துக் காட்டப்பட்டது என்ற செய்தியைத் தீட்சிதரின் வரலாற்று நூலில் அதன் ஆசிரியர் N.ரமேசன் அவர்கள் பதிவு செய்திருக்கிறார்.

இசை வடிவிலும், ஓவியத்திலும் பிரபோத சந்திரோதயம் நிலவியிருந்தது. காசியில் வெங்கடேச சோமணி என்பவர் மூலநூலின் 4ஆம் அங்கத்திற்கு இசை அமைத்தார். இதற்கு ஆதிகேசவர் என்பார் விரிவுரை செய்திருக்கின்றார். கி.பி. 17ஆம் நூற்றாண்டில மாதை வேந்தன் திருவேங்கடாதன் இந்நூலை தமிழில் செய்த பிறகு, தஞ்சையை ஆட்சிபுரிந்த மராட்டிய மன்னன் முதல் துலஜா என்ற துக்கோசி மன்னர் (கி.பி.1715) காலத்தில் இந்நூலின் காட்சிகள் இருபதிற்கும் மேற்பட்ட ஓவியங்களாக வரையப்பட்டு தஞ்சை சரஸ்வதி மகாலில் பாதுகாக்கப்பட்டு வருகிறது என்பதையும் அறிய முடிகிறது.

மேற்கண்டவற்றை நோக்கும்பொழுது, 'பிரபோத சந்திரோதயம்' என்ற நாடகம் கி.பி. 11-12ஆம் நூற்றாண்டில் தோன்றியது முதல் தொடர்ந்து பல வடிவங்களில் நிலைப்பெற்று வந்திருக்கிறது என்பதை அறியமுடிகிறது. இதைப் பெருங்காப்பியமாக தமிழிலும் வடமொழியிலும் விரிவுபடுத்திப் படைத்த மாதைவேந்தன் திருவேங்கடநாதன் என்பார் அவர் காலத்து அரசியல் பிரதிநிதித்துவத்தின் உச்சத்திலிருந்து ஆட்சி செய்தவர். அவ்வாறு அரசியல் துறையில் இருந்தார் ஒருவர்

கேவலாத்துவிதத்தை தருக்கமுறையில் நிறுவும் உருவக காப்பியத்தைத் தமிழில் செய்ததிலிருந்து அக்காலத்து அரசியல் துறையில் சமயவாதத்திற்கு இருந்த செல்வாக்கான ஊடுறுவலை அவதானிக்க முடிகிறது. இது நிற்க.

இனி, திருவேங்கடநாதரைப் பற்றி ஒரு சிறிது நோக்குவம். கி.பி. 17ஆம் நூற்றாண்டில், சோழநாட்டில் தஞ்சைக்கு அடுத்த கீழ் மாத்தூராகிய மாதையில் பெருமாள் என்பவருக்கு இரண்டாவது மகனாக காணியாளர் வகுப்பைச் சேர்ந்த சுமார்த்தப் பிராமணர் இனத்தில் பிறந்தவர் திருவேங்கடநாதர். இவரின் அரசியலாளுமையின் காரணமாக, திருமலைநாயக்கர் (கி.பி.1623-59), முத்து அழகாத்திரி (கி.பி.1660-62), சொக்கநாதர் (கி.பி.1662-82), ரங்ககிருஷ்ண முத்துவீரப்பர் (கி.பி. 1682 - 88) மற்றும் மங்கம்மாள் (கி.பி. 1689 - 1704) ஆகியோர் காலத்தில் அமைச்சராகவும் பிரதிநிதியாகவும் விளங்கி, திருநெல்வேலி, மலையாள நாட்டில் திருவடி தேசம், கூடலூர், கம்பை கரிய பிராந்தியங்களில் நல்லாட்சி புரிந்தவர். இவர் பிரபோதசந்திரோதயம் என்ற நூலை தன் குருநாதர் இராகவானந்தரின் விருப்பத்திற்கேற்ப வடமொழியிலும் தமிழிலும் பாடியுள்ளார். இதுவன்றி வேதாந்தக் கருத்துக்களை எளியவரும் அறிந்துகொள்ளும் வண்ணம் பெண்கள் பாடுதற்குரிய வகையில் ‘கும்மி’ப் பாடல்கள் போல ‘ஞான சோபானம்’ என்ற நூலையும் செய்துள்ளார். இவர் அரச பிரதிநிதியாக இருந்தபொழுது, திருவாரூர் வைத்யநாத தேசிகர், சுவாமிநாத தேசிகர், படிக்காசுப்புலவர், சதாசிவ நாவலர், பணவிடு தூது பாடிய புலவர் ஆகியோரையும் பிற புலவர்களையும் ஆதரித்துள்ளார் என்பதை இவர்கள் செய்த நூல்களின் மூலம் அறியமுடிகிறது.

பணவிடுதூது நூல் (ஆசிரியர் பெயர் தெரியவில்லை), பிரபோத சந்திரோதயப் பாயிரப்பாடல்கள், இலக்கண விளக்கப் பாயிரப் பகுதிகள், படிக்காசுப் புலவரின் பாடல்கள், சாசனத்தமிழ்க்கவி சரிதம் என்ற நூலில் பண்டித மு. ராகவையங்கார் (பக்.188-192) எழுதியிருக்கும் செய்திகள், கி.பி.1683இல் கொடுக்கப்பட்ட வன்னிக்கூடம் செப்புப்பட்டயம் (I.M.P.T.N. 304-M, M.E.R. 343 of 1929-30), திரு.மு.ராகவையங்கார் 1929இல் சென்னை ஓரியண்டல் ரீஸர்ச் ஜர்னல் இரண்டாம் தொகுதியில் (பக்.34-43) ஆங்கிலத்தில் எழுதியுள்ள வரலாற்றுக் குறிப்புகள், இலக்கணக்கொத்து பாயிரம், டெய்லர் ரிபோர்ட்டில் என்பார் பணவிடுதூது நூலை ஆய்வு செய்து தொகுத்த செய்திகள், ராபர்ட் சுவெல் (பக்.167, IMP.III 304M) என்பாரின் அறிக்கை, நெல்சன் என்பார் எழுதிய மதுரை வரலாறு என்னும் நூலின் மூன்றாம் பகுதி ஆகியவையும் இன்ன பிற நூல்களும் தென்மாதையாரைப் பற்றியத் தரவுகளைத் தருகின்றன.

**பிரபோத சந்திரோதயச் சுவடிகள்:**

சுவடிகள் - (i) தஞ்சை, சரசுவதி மகால் நூலகத்தில் தமிழ்ச்சுவடிப் பிரிவில் (வால்யூம் 2-ல்) 658 எண்ணைக் கொண்டது (நெ.658, M நெ.533). வேதாந்த விஷயம் என்று எழுத்தர்களால் எழுதப்பெற்றுள்ள இச்சுவடி 15-8-1912இல் காப்பீடு படி எடுக்கப்பட்டுள்ளதாகக் குறிப்புள்ளது. உற்பத்திச் சருக்கம் முதல் சமணனாதியர் சருக்கம் 45வது பாடல் வரை உள்ளது. பாயிரப்பாடல்கள் விடுபட்டுள்ளன. சுவடி ஏடுகள் முன்னும் பின்னும் விடுபட்டுள்ளன.

(ii) மகாமகோபாத்யாய டாக்டர் உ.வே.சாமிநாதையரவர்கள் நூலகத்தில் தமிழ்ச் சுவடிப்

பிரிவில் பிரபோத சந்திரோதயம் 2 சுவடிகள் உள்ளன. (Volume 4, நெ.1900, 1901)

(iii) இராமநாதபுரம் சமஸ்தான காஷ்கீப்பர் ஸ்ரீமீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் சகோதரர் இராமசாமிப் பிள்ளை யவர்கள் பிரதி.

**பதிப்புகள்:**

1898 - வ.வெங்கடராமய்யர் பதிப்பு.

1911 - பிரபோத சந்திரோதய வசநம் ஸ்ரீமாந் இராமயோகிகள் வசனரூபமாக இயற்றியது. சை.சிவசங்கர செட்டியாரின் இரண்டாம் பதிப்பு.

1913 - வ.வெங்கடராமய்யர் பதிப்பு (இரண்டாம் பதிப்பு)

1988 - வ.வேணுகோபாலன் பதிப்பு. சரசுவதி மகால் வெளியீடு எண்:263 (ஆராய்ச்சிப் பதிப்பு)

**அளவையியலின் கூற்றுமுறைகள் (Syllogism in Epistemology):**

இந்தியத் தத்துவத்தில் நியாயவாதிகள் (நையாயிகர்) கூற்றுமுறையை விரிவாக ஆராய்ந்துள்ளனர். மலையில் புகையைக் கண்டு நெருப்பின் இருப்பை நாம் அனுமானிப்பது இவ்வளவையின் கூற்றுமுறைகளின் அடிப்படையில்தான். நெருப்பை அறிவதற்குக் காரணமான இடத்தைப் ‘பட்சம்’ (Paksa) என்பர். மலை எனும் இடத்தில் உள்ளதாக அறியப்படும் நெருப்பைச் ‘சாத்தியம்’ (Saadhya) என்பர். வெளியே தெரியும் புகையே நேரில் காணாத நெருப்பின் ‘அடையாளம்’ இத்தகையவற்றை ‘இலிங்கம்’ (Linga), ஏது அல்லது ‘காரணம்’ என்பர். இடம், காட்சிப் பொருள், மனத்தால் தெரியும் பொருள் என்னும் இந்த மூன்றுமே கூற்றுமுறை அல்லது அனுமானத்தில் அடிப்படையாகும். மலை ஆரிய பக்ஷத்தில் நெருப்பின் அடையாளமாகிய புகை இருப்பதை இந்திய தத்துவத்தில் ‘பக்ஷதர்மதா’ என்பர். இலிங்கமாகிய (அடையாளம்) புகைக்கும் நெருப்பாகிய சாத்தியத்திற்குமான தொடர்பு மாறாதது என்பதால் மலையில் புகையைப் பார்த்ததும் அங்கு நெருப்பு உள்ளது எனத் தீர்மானிக்க முடிவதை ‘லிங்கபராமர்ஷ’ என்பர்.

இந்தியத் தத்துவத்தின் பக்ஷம், சாத்யம், இலிங்கம் என்னும் மூன்று கூற்று உறுப்புக்களும் அரிஸ்டாட்டில் கூற்றுமுறையில் சிறுமொழி (Minor term), பெருமொழி (Major term), தொடைமொழி (Middle term) என்பனவற்றை ஒத்தனவாகும். ஐந்து உறுப்புக் கொண்ட கூற்றுமுறையாவது:

1. பிரதிக்ஞை (உறுதி)
2. ஏது (காரணம்)
3. எடுத்துக்காட்டு (உதாரணம்)
4. உபநயம் (பயன்படுத்துதல்)
5. நிகமனம் (முடிவு)

**தமிழ்க் காப்பியங்களில் கூற்றுமுறை:**

அளவையியல் பற்றிய அறிவு தமிழினத்திற்கு செவ்வியல் காலந்தொட்டு இருந்தது என்பதை ஈண்டு ஒரு சிறிதுகாட்டுதும். இரட்டைக் காப்பியங்களுள் ஒன்றான மணிமேகலை கூற்றுமுறை உறுப்புக்கள் ஐந்து எனக் காட்டுகிறது. அவை, பக்கம், ஏது, திருட்டாந்தம், உபநயம், நிகமனம் என்பனவாம். இதில் ஒவ்வொன்றிற்கும் வாக்கியப்பெயர் என்ன என்பதையும் அதற்கு

எடுத்துக்காட்டையும் பின்னர் வரிசையாகக் கூறுகிறது. அவற்றில் ‘பக்கம்’ என்பதற்கு,

“. . . அவற்றில்

பக்கம் இம்மலை நெருப்புடைத் தென்றல்” (மணி.29, 58, 59)

என எடுத்துக்காட்டுடன் விளக்குகிறது. அதாவது, பக்க வாக்கியம் என்பது பக்கத்தையும் சாத்தியத்தையும் உடையதாக இருக்கும்.

“புகையுடைத்து ஆதலால் எனல் பொருந்து ஏது” (மணி.29:60)

எனும் அடியில் ஏதுவையும்,

“வகையமை அடுக்களைபோல் திட்டாந்தம்” (மணி.29:61)

என்பது திருட்டாந்தத்தையும் விளக்குவதாக அமைகிறது. உபநய வாக்கியம் பற்றி,

“உபநயம் மலையும் புகையுடைத்து என்றல்” (மணி.29:62)

என்ற அடியில் எடுத்துக்காட்டுகிறது. அடுத்து,

“நிகமனம் புகைஉடைத்தே நெருப்பு உடைத்து எனல்” (மணி.29:63)

“இந்த மலை புகை உடையது ஆதலால் நெருப்பு உடையது” எனச் சாத்திய சாதன உறவைக் கூறுகிறது. இவ்வாறு காலத்தால் முற்பட்ட மணிமேகலைக் காப்பியம் அளவையியலைச் சிறப்பாக விளக்குகிறது. கி.பி. 400இல் தோன்றிய திக்நாகர் என்பாரின் நியாயப் பிரவேசம் நூலையும் கி.பி. 7ஆம் நூற்றாண்டில் தோன்றிய தர்மகீர்த்தியன் நியாயபிந்து நூலையும் தழுவி, சாத்தனார் தருக்கவாத நுட்பங்களை மணிமேகலை காப்பியத்தில் அமைத்துள்ளார் என்பது உ.வே.சா.வின் கருத்து. இதைத் தொடர்ந்து கேசி காவியங்களிலும் சமயவாதத்தினூடே தருக்கக் கூறுகளை இனங்காணக் கூடும். விரிப்பின் பெருகும் என அஞ்சி விடுக்கிறோம்.

**பிரபோத சந்திரோதயத்தில் சமயவாதத்தின் வழி அறியலாகும் தருக்கவியல் கூறுகள்:**

இக்காப்பியம் அடிப்படையில் அத்வைத வேதாந்தக் காப்பியம். அத்வைதக் கொள்கையைக் கொண்டு மற்ற மதங்களின் கொள்கைகளை மறுத்துரைப்பது இக்காப்பியம். இக்காப்பியத்தில் விவேகன் முதலானோர் அத்வைத நெறியைப் பின்பற்றுபவர்கள். மோகன் முதலானோர் புறச்சமயிகளான சைனரில் ஆசீவகர், நிகண்டர், காபாலிகர், உலகாயதர், புத்தரில் சௌத்ராந்திகர், யோகாசாரர், மாத்தியாமிகள், வைபாஷிகர் ஆகியோரைப் பின்பற்றியவர்கள்.

அத்வைத நெறியைப் பின்பற்றி விவேகன் முதலானோரை தழுவி நின்றவர்களே வேத நெறியைச் சார்ந்த மீமாஞ்சர், சமுச்சயர், தார்க்கிகர், சாங்கியர், யோகர், சைவர், வைணவர் ஆகியோர். சைவரில் பாசுபதர், வாமிகள், வைரவர், மகாவிரதிகள், காளாமுகர் உளர். வேதத்துக்குப் புறச் சமயங்களான, சைனம் முதலிய மதங்களை அத்வைத வேதாந்த மரபு கொண்டு மறுத்துக் கூறப்படுகின்றது. வேதத்தைத் தழுவிய அகச்சமயங்களான மீமாஞ்சம் முதலிய மதங்களையும் திருத்துகின்றது அத்வைத வேதாந்த மதம்.

புறச்சமயத்தவரான உலகாயதனை 31ஆம் சருக்கத்திலும், யோகாசாரர், வைபாஷிகர், மாத்தியமிகர், சௌத்ராந்திகர் ஆகிய நால்வரையும் 32ஆம் சருக்கத்திலும் ஆசீவகரையும், நிகண்டரையும் 33ஆம் சருக்கத்திலும் வேதாந்தியின் சார்பில் தார்க்கிகன் வாதம் செய்து வெற்றிக்

கொள்கிறான். வடமொழி நாடகத்தில் உபநிஷத்தையே மீமாஞ்சன், யோகன், தார்க்கிகன் முதலான வேத சமயத்தவருடன் உரையாடி அவர்கள் கொள்கையை மறுத்ததாக உள்ளது. தமிழ்க் காப்பியத்தில், விவேகன் சார்பில் அத்வைத வேதாந்தியே, மீமாஞ்சன், தர்க்கன், சைவன், வைணவன் முதலியோரை வாதம் புரிந்து வென்றதாக உள்ளது. மீமாஞ்சன், சமுச்சயன், சாங்கியன், யோகமதம், பாஞ்சராத்திரம், சைவ சித்தாந்தம் ஆகியவற்றை முறையே 39, 40, 41, 44, 45, 46 ஆகிய சருக்கங்களில் வேதாந்தி மறுத்தாள். சமயவாதத்திற்கு அடிப்படையாக உள்ள அளவையியல் கூறுகளை அதிகம் ஆய்ந்த தருக்கிகனை மறுத்தற்கு மட்டும் இரண்டு சருக்கங்களை அமைத்துக் காட்டினார் திருவேங்கடநாதர். 42ஆவது சருக்கமான தார்க்கிகன் மதச் சருக்கத்தில் தருக்கர் தம் கொள்கைகளைக் காட்டினார். அவற்றை மறுத்து அத்வைத வேதாந்தத்தை நிறுவுவதாக 43ஆவது சருக்கம் அமைக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு சருக்கத்திலும் தான்கூறும் கொள்கை அதற்கு காரணம் (ஏது) அதற்கு தான் காட்டும் உதாரணமும் இம்மூன்றை மறுத்துரைக்கும் துணிபுமும் அதற்கு காட்டப்படும் காரணமும் காட்டும் என ஒவ்வொரு கொள்கைக்கும் காணலாம். ஏடு இடந்தராது என விடுத்தோம்.

மேற்கூறியவையன்றி, 11ஆம் சருக்கத்தில் (இடம்பாங்காரச் சருக்கம்) மோகனைச் சார்ந்தவர்களான இடம்பன், அகங்காரன் இருவரும், அகச்சமயங்களை இழிபுபடுத்திக் கூறுகிறார்கள். இடம்பன், வேதநெறியாளரைப்போல, வேஷம் கொண்ட ஒரு கூட்டத்தை உருவாக்கி நடிக்க வைக்கிறான். வைதிகர், அத்வைதிகள், வைணவர், மாத்வர், சைவர் ஆகியோரை உண்மை மதவாதிகளுக்கு மாறாகச் செயல்படுவதாகக் கண்டு அகங்காரன், அவர்களைப் பற்றி இழிவாகப் பேசுகிறான். இப்பகுதி மூலநாடகத்தைத் தழுவியதுதான் என்றாலும் தமிழ் மரபைச் சிறப்பாகக் கூறி, தமிழ்ச் சமயங்களை உயர்வாகக் கூறி, நன்னெறிகளை அறிவுறுத்தவே தான் என்பது அறிய வேண்டும்.

**தொகுப்புரை:**

பிரபோதசந்திரோதயம் என்னும் மெய்ஞ்ஞான விளக்கம் என்ற இந்நூல் கி.பி. 11-12ஆம் நூற்றாண்டில் தோன்றிய காலந்தொட்டு, கி.பி. 17ஆம் நூற்றாண்டில் தமிழில் பெருங்காப்பியமாக பரிணமிக்கும் வரையும் அதன்பிறகும் பல கலை வடிவங்களில் உயிர்ப்போடு இருந்திருக்கிறது. சமூகத்தை ஒருவாற்றான் திருத்தியது என்று அறிகிறோம். அரசியல் பிரதிநிதிகளிடம் நிலவியிருந்த சமயசார்பை நன்கு புலப்படுத்துவதாகவும் இந்நூல் அமைந்திருக்கின்றது. தருக்கம், சமயபோதம் பிரபோதம் (பிரம்மஞானம்) பற்றிய ஆராய்ச்சிக்கு அறிவுக் கருவூலமாகவும் இக்காப்பியம் திகழ்கிறது என்பதையும் சிறிதளவு இக்கட்டுரையில் காட்டினோம்.

**துணைநூற்பட்டியல்**

1. அப்பையதீக்ஷிதர் வரலாறு - N. ரமேஷ் IAS
2. இலக்கண விளக்கம் - வைத்யநாத தேசிகர், வே.கோபாலையர் பதிப்பு, சரசுவதி நூலகப் பதிப்பு.
3. இலக்கணக்கொத்து - சுவாமிநாத தேசிகர், வே.கோபாலையர் பதிப்பு, சரசுவதி நூலகப் பதிப்பு.
4. சாசனத் தமிழ்க்கவி சரிதம் - பண்டித மு.ராகவையங்கார்
5. டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூலக அட்டவணைப் பட்டியல் 1 - 4

6. தமிழர் சிறப்பு - M.S. சுப்பிரமணிய ஐயர்
7. பிரபோத சந்திரோதயம் - அருணாசல நாட்டார் (பதி.), 1922.
8. பிரபோத சந்திரோதயம் - பிர்ம்மஸ்ரீ எஸ்.ராஜாசாஸ்திரி மொழிபெயர்ப்பு, மாயவரம் ஆர்.வைத்தியனாதையர் அண்டு கம்பனியார் பதிப்பு, 1911.
9. பிரபோத சந்திரோதயம் - வ.வேணுகோபாலன் பதிப்பு, சரசுவதி மகால் வெளியீடு, 1988.
10. மதுரை நாயக்கர் வரலாறு - N.R. சுப்ரமணிய ஐயர்
11. மதுரை நாயக்கர் வரலாறு - P.R. நாராயணசாமி ஐயர்
12. Madura Contry - Nelson Vol.III